பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூதஹு மாசி மீ 21 உ செவ்வாய்க்கிழமை (05-03-1991) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 98

# குடாநாட்டில் நேற்று முழுதும் விமானங்கள் வெறியாட்டம்!

## எட்டு இடங்களில் நடந்த தாக்குதலில் 22 பேர் மரணம்; 25 பேருக்கு மேல் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்ப்பாணக் குடாநாடு எங்கும், நேற்றுப் பரவலாக பொம்மர்கள் வெறியாட்டம் நடத்தின. எட்டு இடங்களில் அவை மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதல்களில் 22 பேர் மரணமானார்கள். 25க்கு அதிகமானோர் காயமுற்றனர்.

கோண்டாவில், அரியாலை, சுன்னாகம், புத்தூர், தொண்டமானாறு, அச்சுவேலி, வல்லைவெளி, வேலணை ஆகிய இடங்களில் பொம்மர்கள் தமது மூர்க்கத்தனத்தைக் காட்டின.

காலை தொடக்கம் மாலை வரை, வெவ்வேறு நேரங்களில் குண்டு வீச்சுகள் திடீர் திடீரென இடம் பெற்றன. பொம்மர்களின் சத்தம் கேட்ட சிறிது நேரத்துக்குள்ளேயே அவை குத்திப் பதிந்து குண்டுகளை வீசின. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடுவதற்குள் குண்டுகள் வீசப்பட்டதால் உயிரிழப்புகள் அதிகமாக இருந்தன.

ஸ்ரீலங்கா பொம்மர்கள் நேற்று வழமைக்கு மாறாக, மிக ஆக்ரோஷத்துடன் குண்டு வீச்சுக்களை நடத்தின.

நேற்றைய குண்டு வீச்சுக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கோண்டாவிலில் 8 பேர் பலி

கொக்குவில், மார்ச் 5

கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் கோவிலடியில் நேற்றுக் காலை 7-30 மணியளவிலும், 11 மணியளவிலும் — இரு தடவை — பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இரண்டாவது தடவையாக — 11 மணியளவில் நடத்தப்பட்ட குண்டு வீச்சில் பூசகர் ஒருவர், அவரது பிள்ளைகள் மூவர், மற்றும் நால்வர் உயிரிழந்தனர். 3 பேர் காயம

[3ஆம் பக்கம் பார்க்க]

## சுன்னாகத்தில் அறுவர் உயிரிழப்பு! 9பேர் காயம்!! உடைமைகள் நாசம்!!!

நேற்று நண்பகல் 12 மணியளவில் சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில் — தபாற் கந்தோருக்கு முன்பாக — நடத்தப்பட்ட பொம்மர் குண்டு வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஆறு பேர் உயிரிழந்தனர். 9 பேர் காயமடைந்தனர்.

'சிவகணேஸ்பவன்' தேனீர் கடை உரிமையாளர் சிங்காரம் செல்வராசா [36 வயது], அந்தக் கடையின் காவலாளி மு. கன்னியப்பு பன்னீர்ச் செல்வம் [65 வயது] மற்றும்— வீட்டில் இருந்த தில்லைநாதன் கமலநாதன் [38

[3 ஆம் பக்கம் பார்க்க]

## மரணச் சடங்கில் கலந்து கொண்ட 4 பெண்களும், ஓர் ஆணும் தொண்டமானாறில் மரணம்!

பருத்தித்துறை, மார்ச் 5

தொண்டமானாறு, காட்டு வேம்புப் பகுதியில் வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 8-30 மணியளவில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் மரணச் சடங்கு நடைபெற்ற வீடு ஒன்றில் குழுமி நின்ற ஐவர் மரணமடைந்தனர். ஐவர் காயமடைந்தனர்,

மூளைக் காய்ச்சலுக்கு இலக்காகி, கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் மரணமான நவநீததாஸ் என்பவரின் மரணச் சடங்கு நடந்து முடிந்த வீட்டின் மீதே குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

இச்சம்பவத்தில் மூளைக் காய்ச்சலில் மரணமானவரின் மனைவியான பத்மினி [22 வயது], அவரது சகோதரி மாணிக்கம் தபோநிதி [24 வயது], கோபாலகிருஷ்ணன் மகேஸ்வரன் [30 வயது],

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரியாலைக் குண்டு வீச்சில் கணவன், மனைவி, மகள் பலி!

அரியாலை அகிலன் [மலர் மகள்] வீதியில் நேற்றுக் காலை 9.45 மணியளவில் நடந்த விமானக் குண்டு வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உடல் சிதறிப் பலியாகினர்; மற்றும் மூவர் படுகாயமடைந்தனர்.

வீரகத்தி பரமசாமி [60 வயது] அவரது மனைவி [illegible] சாமி தவமணி [illegible] அவர்களது மகள் ஆனந்தகுமாரி [25 வயது] ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர். தாயும் மகளும் குண்டு வீச்சு நடந்த இடத்திலேயே [illegible]

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வேலணை - சாட்டியிலும் குண்டு வீச்சுத் தாக்குதல்!

வேலணை, மார்ச் 5

வேலணை வங்களாவடிச் சந்தி, சாட்டி பள்ளிவாசல் பகுதி ஆகிய இடங்களிலும் நேற்று நண்பகல் 12 மணியளவில் பொம்மர் தாக்குதல் இடம்பெற்றது. இரண்டு பொம்மர்கள் மாறி, மாறி தாக்குதல்களை நடத்தின.

வங்களாவடிச் சந்தியில் வீசப்பட்ட இரண்டு குண்டுகளில் ஒன்று தச்சுத் தொழிற்சாலை ஒன்றில் விழுந்து. வெடித்ததில் தொழிற்சாலை சேதமுற்றது. அங்கு தொழில்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வல்லைமுனியப்பர் ஆலயம் குண்டு வீச்சினால் சேதம்!

வல்லைவெளி முனியப்பர் ஆலயமும், அருகில் உள்ள சிறிய பிள்ளையார் கோயிலும் நேற்று விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்தன.

நேற்றும் பிற்பகல் 2.15 மணிக்கு ஆலயத்துக்கு அருகில் பொம்மர் ஒன்று குண்டு வீசியது. இதனால் ஆலயமும் அருகிலிருந்த தலவிருட்சமும் சேதமடைந்தன.

சம்பவம் நடைபெற்ற போது வீதியால் பருத்தித்துறை நோக்கி சைக்கிளில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புத்தூரில் நெசவாலை சேதம்

அச்சுவேலி, மார்ச்5

புத்தூரிலும் நேற்றுக் காலை 10.45 மணியளவில் விமானக் குண்டு வீச்சு இடம் பெற்றது.

இப்பகுதியில் மூன்று குண்டுகள் வீசப்பட்டன.

ஒரு குண்டு மின்தறி ஆலை ஒன்றின் மீது விழுந்ததால் ஆலையில் இருந்த இயந்திரங்களும் பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளும் சேதமடைந்தன.

புத்தூர்—சுன்னாகம் வீதியில் உள்ள சத்திரத்தடியில் விழுந்து வெடித்த மற்றொரு குண்டினால் பல வீடுகள் சேதமடைந்தன.

மூன்றாவது குண்டு வெளியான பனங் காணியினுள் விழுந்து வெடித்தது.

குண்டு வீச்சு நடந்த பகுதியில் நின்ற மக்கள் பாதுகாப்பான இடங்களில் ஒதுங்கிக் கொண்டதால், உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன.

[உ-11-15-72]

## முச்சந்தி முரளி



இஞ்சை வெறியாட்டம் நடத்திக்கொண்டு வெளிநாடுகளிலை வெறும் புளுகுகளை அவிட்டு விடுவினம்......!

## அச்சுவேலியிலும்

அச்சுவேலி, மார்ச் 5

அச்சுவேலியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் அச்சுவேலி மகாவித்தியாலயத்துக்கு முன்னால் உள்ள பழைய பேக்கரிக் கட்டடமும், அருகில் இருந்த வீடுகளும், மகாவித்தியாலயக் கூரைகளும் சேதமடைந்தன.

அச்சுவேலி ம. வி., அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் வீடு திரும்பிய பின்னர் குண்டு வீச்சு இடம்பெற்றதால் பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது

இக்குண்டு வீச்சில் பொது மக்கள் சிலர் காயமுற்றனர்.

[உ-11]

## வெளிநாடு சென்றோரின் சொத்துகள் பற்றி அறிக்கை

வெளிநாடுகளில் குடும்பமாக வசிப்போரின் வீடுகள், அசையும்- அசையாச் சொத்துக்கள் குறித்து விடுதலைப் புலிகள் தலைமையகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு;

வெளிநாடுகளுக்குக் குடும்பமாகச் செல்வோருடைய சொத்துக்களை சமகால நெருக்

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் 10 பரப்புக் காணியும், நல்லூர் செல்லர் வீதியில் வீடு கட்டக்கூடிய 4½பரப்புக் காணியும்,லேத் மெஷின்கள், தகடு வெட்டும் கட்டர் என்பனவும் விற்பனைக்கு உண்டு. பரஸ்கேர் ஸ்தாபனம், முத்திரைச் சந்தை, நல்லூர். [16038]

### ''இருள் இரவில் அல்ல''

மீராவெளியீடு சிதம்பர திருச்செந்திநாதன் எழுதியது. 'எந்த ஒரு பெண்ணும் இளம் வயதில் கணவனை இழக்கக்கூடாது இழந்தால்' வித்தியாசமான நாவல் துர்க்கா சுன்னாகம். திருக்கணிதம் சாவகச்சேரி. பீக்கென்ஸ் [B] இளிநொச்சி. யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும். [16028]

### நோவு எண்ணெய்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணை, எஸ்ரி மெடிக்கல்ஸ், 490,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [16014]

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210,கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம்,3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16037]

### வகுப்புகள்

3-3-91 ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை 06-03-91 புதன் மு. ப 8-00, மு. ப. 10-30 நடைபெறும். புலமைப் பரிசில் Paper Class சனி, ஞாயிறு 10-30 — 12-30 நடைபெறுகிறது. புதிய ஆண்டு 5 புலமைப்பரிசில் Morning Class, Evening Class ஆரம்பமாகவுள்ளது. ஆண்டு 4 முதல், ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்சப்படுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [16035]

### புளொக், புகைப்படம்

புளொக் [Block] புகைப்படம், றபர்சீல், கலர்ப்படம், ஓவியம், பிறேம் போடுதல், கலர் பிலிம் சுருள்கள், ஸ்ரிக்கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள். கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். [சி-5814]

### தவறி விட்டது

தேசிய அடையாள அட்டை இல. 325611928 V தி. இலட்சுமிப்பிள்ளை, சென்ற மாதம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ''உதயன்'' காரியாலயத்தில் ஒப்படைத்து உதவுமாறு வேண்டுகின்றேன் நன்றி. [16033]

## 5 வருட சம்பளம் முற்பணம்

கொழும்பு, மார்ச் 5

அரச ஊழியருக்கு வீடமைப்புக் கடனாக ஐந்து வருடச் சம்பளத்தை முற்பணமாக வழங்குவது என்று அரசு முடிவு செய்துள்ளது. [இ-எ]

## 6-ம் மாத நினைவஞ்சலி



### விஜயரத்தினம் பத்மநாதன்
[பாப்பா]

அன்னை மடியில்: 24 10 - 1960

அரக்கரின் அழிவில்: 24 - 8 - 1990

அப்பா அப்பா என்று நாம் ஆயிரம் முறை கத்தி அழுதாலும் ஆறாது அப்பா! எங்கள் துயர் தீராது. அத்தனையும் உங்களிடம் அன்பு, பண்பு, பாசம், இத்தனையும் இன்று எங்கே அத்தனையும் தெரிந்திருந்தும் சொல்லாமல் வந்ததே அப்பா உங்கள் சோகமயம். அப்பா சிரித்த முகம், எதற்கும் சலிக்காத உள்ளம், கண்ணன்போல் இதயம், உங்கள் கபடமில்லா வாழ்வினிலே காலனவன் கவர்ந்து விட்டான் நொடிப் பொழுதில்.

கடந்த 24 - 8 - 90 அன்று தீவகம் நோக்கிய சிங்கள இனவெறி கூலிப்படைகளினால் மரணமான எமது அன்புத் தலைவனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி - புனிதம்,
அருமை மகள் - நிரேகா.

மண்டைதீவு - 8 [16031]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி
(05 03-1991)



தோழர்

### சி. விஜயானந்தன் அவர்கள்
[இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரும், தொழிற்சங்கவாதியும்]

மலர்வு: 13 - 12 - 1936

உதிர்வு: 08 - 03 - 1988

எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் எத்தனை சென்றாலும் தங்கள் நினைவு மாறாது. வீட்டுக்கு நல்லவராக, நாட்டுக்கு நல்லவராக வாழ்ந்த தங்கள் நல் வாழ்க்கை, தங்களை எங்களுடன் வாழவைத்து எங்களையும் வாழ்விக்கும், தங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள்.

கந்தரோடை,
சுன்னாகம். [சி-5811]

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

### வீரகத்திப்பிள்ளை செல்வரெத்தினம்

ஆத்மார்த்தம்:
10 — 05 — 1916

ஆத்ம அந்தம்:
26 — 02 — 1989



நீங்கள் ஆத்ம சாந்தி அடைந்த 2-ம் ஆண்டு இத்தினத்தில் நாம்அனைவரும் நும் உணர்வுகளின் மூலம் துணை கொண்டு வாழவும், வழிகாட்டவும் எல்லாம் வல்ல இறைமையை பிரார்த்திப்போமாக.

[16044] மனைவி, உறவினர்கள்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
12
—
11
—
1914



உதிர்வு:
03
—
02
—
1991

### சின்னத்தம்பி அன்னம்மா
[உரும்பராய்]

குலக்கொழுந்தாய், குடும்பவிளக்காய், குணக்குன்றாய் வாழ்ந்து எம்மையெல்லாம் அன்பால், பாசத்தால் அரவணைத்து வாழ்வுநெறி காட்டிய அன்னையே உங்கள் பிரிவால் வாடும் நாம் உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ந. சிவபாதன்
ஆரணி, டச்சு றோட்,
அளவெட்டி, [16039]

## 6ஆம் மாத நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
19 - 01 1961

ஆண்டவன் அடியில்:
09 - 09 - 1990

அமரர்

### வத்சலாதேவி - பொன்னுத்துரை
(B. Sc.)

எங்கள் அன்புச் செல்வமே வத்சலா! நீ எங்களை விட்டுப் பிரிந்து ஆறு மாதங்கள் சென்றாலும், உனது அன்பான தோற்றமும், இனிய நேர்மையான பேச்சும், திறமையான செயல்களும், எவருடனும் இங்கிதமாய்ப் பழகும் பண்பும், இவைபோன்ற மற்றும் நற்குணங்களும் எம்மனதை விட்டு மறையாது, அழிக்க முடியாத ஓவியம் போல என்றும் நிலைத்து நிற்கின்றன.

செல்வமே உனது ஆன்மா சாந்தியடைய அருள் புரிய வேண்டுமென உனது வழிபடு தெய்வமான விநாயகப் பெருமானை அனைவரதமும் வேண்டிக் கொள்கின்றோம்.

உன் பிரிவால் வருந்தும்:
குடும்பத்தினர்.

[16013]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பாடசாலை மீது கண்

ஸ்ரீலங்கா விமானப்படைகளின் மஸாசெட்டி பொம்மர் விமானங்கள், தமிழ்ப் பகுதிகளில் இப்போது பாடசாலைகளையே அனேகமாக இலக்கு வைக்கின்றன. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, கட்டைப்பிராய் காசிப்பிள்ளை வித்தியாலயம் ஆகியன கடந்த சனிக்கிழமை இலக்கு வைக்கப்பட்ட பாடசாலைகள்.

கடந்த ஒன்பது மாதப் போரில் தமிழ்ப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான பாடசாலைகளை படையினர் இலக்குவைத்துத் தாக்கி உயிர்ச்சேதமும், உடைமைச் சேதமும் உண்டாக்கி இருக்கிறார்கள்.

பாடசாலைகள்மீது தாக்குதல் நடத்துவது ஒரே கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தும் நஞ்சான நோக்கமுடையது. பாடசாலைகளைச் சேதமாக்கித் தமிழ் மாணவரின் கல்வியைச் சீர்குலைப்பது ஒன்று. எதிர்காலச் சந்ததியினரான தமிழ் மாணவர்களைக் கொன்று குவிப்பது மற்றது.

தமிழ் மாணவரின் கல்விக் கொலையின் நோக்கம் யாது என்பது குறித்து இரண்டு நாட்களுக்கு முன்னர் இப்பத்தியில் ஆராய்ந்திருந்தோம். தமிழர்கள் கல்வி அறிவுள்ளவர்களாக இருப்பதால்தான் உரிமை கேட்கிறார்கள்; அதற்காகப் போராடுகிறார்கள். அந்த நிலையைச் சீர்கெடுத்துவிட்டால், படிப்பறிவில்லாத தமிழர் சமூகம் உருவாகிவிட்டால், அவர்களை அடிமையாக வைத்திருப்பது இலகுவாகிவிடும்- இது முதலாவது இலக்கு.

அதற்கும் மேலாக தமிழர்களின் எதிர்காலச் சந்ததியை கொன்று அழித்துவிட வேண்டும் என்பது இரண்டாவது இலக்கு. நாளைய சந்ததியாக மாறவிருக்கும் இன்றைய மாணவர் சமுதாயம், நேற்றைய தமிழர் சமுதாயத்தைப்போல உரிமை இன்றி வாழ்வதற்கு ஒரு கணமும் சகிக்காது என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும்.

ஆகையால் தமிழர் இன அழிப்பின் முக்கிய கட்டமாக மாணவர்களைக் கொன்றுவிட வேண்டும் என அரசு கணக்குப்போட்டிருக்க வேண்டும். அவ்வாறில்லை என்றால் பாடசாலைகள்மீது குண்டு வீசுவது ஏன்?

சர்வதேச யுத்த வரன்முறைகளின் பிரகாரம் பொதுமக்கள் கூடும் இடங்கள், ஆஸ்பத்திரிகள், ஆலயங்கள், பாடசாலைகள் தாக்குதலில் இருந்து தவிர்க்கப்பட வேண்டும் என்பது விதி.

ஆனால் சட்டபூர்வமான அரசாங்கம் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஸ்ரீலங்கா அரசாங்கம் [அதன் படைகள்] தவிர்க்கப்பட்ட இடங்களை நோக்கித்தான் தாக்குதல்களை நடத்துகின்றது. இத்தனைக்கும், எதிரிகளின் இலக்குகள் மீதே தாம் அச்சொட்டாகத் தாக்குதல் நடத்தி வருவதாக உலகத்தையும் ஏமாற்றுகின்றது.

இந்த அநியாயத்தை, அக்கிரமத்தைத் தட்டிக் கேட்க எவரும் இல்லை என்ற எக்காளத்துடன் அப்பாவி மக்களை, நிராயுதபாணிகளை அவை கொன்று வருகின்றன. ஒன்பது மாதங்களாக இந்த அசுரத்தனம் தொடர்ந்தபோதிலும் வெளி உலகம் கைகட்டி, வாய்பொத்தி, பார்த்து நிற்கின்றது. ஓர் இனம் அநியாயமாக அழிக்கப்படுவதை நாகரிக உலகம் பார்த்துக் கொண்டு, சகித்துக் கொண்டு இருக்கிறதே! தூ வெட்கம்; வெட்கத்திலும் வெட்கம்!

# ஈராக்கின் துறைமுக நகர் பஸ்ரா ஷியா மத தீவிரவாதிகள் கையில்

ஈராக் துறைமுக நகரான பஸ்ராவை ஷியா மத தீவிரவாதிகள் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் — அவர்கள் பன்னாட்டுப் படையினரின் உதவியை நாடியிருப்பதாகவும் துபாய் வானொலி நேற்றுக் காலை அறிவித்தது.

குவைத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருக்கும் ஈராக் படையினர் பலரும் ஷியா மத தீவிரவாதிகளுக்கு ஆதரவளித்து வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி சதாம் ஹுசேனுக்கு எதிராக இந்த ஷியா மத தீவிரவாதிகள்குழு செயற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சதாமின் பாத் சோஷலிஸ்ட் கட்சியின் பஸ்ரா தலைமையகத்தை ஷியா மத தீவிரவாதிகள் கைப்பற்றி விட்டனர் என்றும்— வேறு பல அரசுக் கட்டடங்களும் இத்தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஷியா குழுவின் சதாம் எதிர்ப்புக் கிளர்ச்சி நடவடிக்கைகள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகின. இதேவேளை நஸாரியா நகரில் உள்ள சிறையை ஆர்ப்பாட்டக்காரர்கள் உடைத்து சுமார் நான்காயிரம் கைதிகளை விடுவித்தனர். பின்னர் நகர வீதிகளில் ஈராக்கிய வீரர்களுடன் அக்கைதிகளும் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் மோதலில் ஈடுபட்டுள்ளனர் என்றும் துபாய் வானொலி தெரிவித்தது.

ஜனாதிபதி சதாமின் நீண்டகால அரசியல் எதிரியான அப்துல் ஹக்கீமின் ஆதரவாளர்கள் என்று ஆர்ப்பாட்டக்காரர்களின் தலைவர்கள் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளனர்.

ஈராக்கின் பல பகுதிகளிலும் சதாம் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன என்று அங்கிருந்து அகதிகளாக டமஸ்கஸ் மற்றும் அம்மான் நகரங்களைச் சென்றடைந்த ஈராக் அகதிகள் தெரிவித்தன. [இ-எ]

## நிபந்தனைகளை அப்படியே ஏற்பதாக ஈராக் அறிவிப்பு

★ நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான நிபந்தனைகள் அடங்கிய ஐ.நா. பாதுகாப்புச்சபையின் தீர்மானத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு செயற்படத் தயாராக இருப்பதாக ஈராக் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸ் இதனை ஐ.நா. பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலருக்கு அனுப்பி வைத்த கடிதம் ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

ஈராக்கிற்குப் போரினால் ஏற்பட்ட அழிவுகள், மக்கள் அனுபவித்து வரும் துன்பங்கள் பற்றி ஐ.நா. கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாதது குறித்து அக்கடிதத்தில் ஜனாப் தாரீக் அஸீஸ் வருத்தம் தெரிவித்துள்ளார்.

## 4 மாகாணங்களில் கிளர்ச்சி

ஈராக் தென்பகுதியில் கடந்த சனிக்கிழமை முதல் இடம்பெற்றுவரும் சதாம் எதிர்ப்புக் கிளர்ச்சி பற்றி பி.பி.சி. தெரிவித்திருப்பதாவது;

ஈராக் குடியரசுக் காவலர் படையைச் சேர்ந்தவர்கள் பலர் பஸ்ரா நகரில் அரசுக் கட்டடங்களைத் தாக்கி வருகின்றனர். சதாமின் பாத் சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்களையும் குடியரசு காவல் படையினர் தாக்கி வருகின்றனர்.

இதுவரை நடந்த சண்டையில் பலர் உயிரிழந்து விட்டனர்.

இக் கிளர்ச்சியை நடத்தும் ஷியா மத தீவிரவாதக் குழு ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இருந்து இயங்குகின்றது.

சதாம் எதிர்ப்புக் கிளர்ச்சி ஈராக்கில் நான்கு மாகாணங்களுக்குப் பரவியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ரஞ்சனின் கொலை:

## பொறுப்பாளிகள் யார்? இரண்டு நாளில் தெரியுமாம்!

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் கொலைச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டு உள்ளனரா அல்லது வேறு சக்திகள் சம்பந்தப்பட்டுள்ளனவா என்பதுபற்றி திறந்த மனதுடன் விசாரணைகள் நடத்தப்படுவதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இக்கொலைச் சம்பவத்தைத் திட்டமிட்டு நடத்திய சூத்திரதாரி யார் என்பது இரண்டொரு தினங்களில் தெரிந்துவிடும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பிரதிப் பொலீஸ் மா அதிபர் கோட்பிரே குணசேகரா தலைமையில் ஒரு குழுவும்—

இரகசியப் பொலீஸ் சூப்பிரண்டென் அமரசேன ராஜ்பக்ஸ தலைமையில் இன்னொரு குழுவும், பொலீஸ் மா அதிபரின் மேற்பார்வையில் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### இறந்தோர் 30ஆக உயர்வு

கொழும்பு, ஹவ்லொக் வீதி கார்க் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்ததாக கொழும்பு அரசு வட்டாரங்களை ஆதாரங்காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

## வெளிநாடு சென்றோரின்....

[முதலாம் பக்கத்தொடர்ச்சி]

கடி நிலைமைகளை கருத்தில் கொண்டு எமது இயக்கம் பொறுபேற்கிறது.

அசையும் சொத்துக்களாக இருந்தாலும் சரி, அசையாத சொத்துக்களாக இருந்தாலும் சரி அவை எமது இயக்கத்திடமே ஒப்படைக்கப்படவேண்டும்.

இவ்வாறு வெளிநாடுகளுக்குக் குடும்பமாகச் சென்றவர்களது சொத்துக்களை எவராவது விலை கொடுத்து வாங்குவதோ, பொறுப்பெடுத்து வைப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குக் குடும்பமாகச் சென்றவர்களுடைய சொத்துக்களை யா[illegible] கொடுத்து வாங்கினாலும் அது அங்கீகரிக்கப்படமாட்டாது. ஆகவே இதுவரை வெளிநாடுகளுக்குக் குடும்பமாக சென்றிருப்போரின் சொத்துக்களை வாங்கி இருப்போர் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் எமது வட்ட, மாவட்ட காரியாலயங்களில் எழுத்து மூலமாக விவரங்களைச் சமர்ப்பித்து அதன் பிரதியை வைத்திருக்க வேண்டும். இதற்கான விவரங்களைத் தெரிவிப்பதற்கான படிவங்களை வட்ட காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத் தருகிறோம்.

நீங்கள் நிரப்பிக் கொடுக்கும் அப்படிவங்கள் பரிசீலனை செய்யப்படும். மீண்டும் நாம் தேவை ஏற்படும்போது உங்க[illegible] வோம்.

இப்படி அ[illegible] தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [இ]

## சுன்னாகத்தில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

லயது], அவரது மகன் அரவிந்தன் [ஒரு வயது], கமலநாதனின் தாயார் தில்லைநாதன் தனலட்சுமி [54 வயது] ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

காயமடைந்த சீனிவாசகம் கந்தசாமி [58 வயது] — சுன்னாகம், இளையதம்பி செல்லையா [54 வயது] இருவரும் ஆபத்தான நிலையிலும், மற்றும் இச் சம்பவத்தில் மரணமான கமலநாதனின் மனைவி மீனலோஜினி [32வயது], சின்னத்தம்பி சபாநாயகம் [60 வயது] — சுன்னாகம், திருஞானசம்பந்தம் சந்திராதேவி [36 வயது] — சுன்னாகம், சேகர் சாந்தி [25 வயது], ஆறுமுகம் தம்பிராசா [35 வயது] — கந்தரோடை, எஸ். சுகந்தினி [20 வயது] — கந்தரோடை, கண்ணன் ஆகியோரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குண்டுவீச்சில் 3 வீடுகள் தரைமட்டமாகின. கராஜ் மற்றும் ஐந்து கார்கள், ஒரு லொறி என்பனவும் நாசமாகின. இன்னும் 3 கடைகளும் சேதமுற்றன.

[ஒ-90-15-89-72]

## பாண்டிச்சேரியில் சட்டசபை கலைப்பு

புதுடில்லி, மார்ச் 5

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபை நேற்று கலைக்கப்பட்டது.

ஜனதாதள் எம். எல் ஏக்கள் தங்கள் ஆதரவை விலக்கியதைத் தொடர்ந்து தி. மு. கவைச்சேர்ந்த முதலமைச்சர் டி. இராமச்சந்திரன் தலைமையிலான அமைச்சரவை கடந்த நவம்பரில் ராஜினாமாச் செய்தது.

அதனைத் தொடர்ந்து சட்டசபை இயங்குவதை ஜனாதிபதி இடைநிறுத்தி வைத்து ஆளுநர் ஆட்சியை அங்கு கொண்டு வந்திருந்திருந்தார்.

இந்த நிலையில் — மீண்டும் அரசு அமைக்கத் தேவையான பெரும்பான்மை சட்டசபையில் தனக்கு இருப்பதாக முன்னாள் முதலமைச்சர் டி. இராமச்சந்திரன் கடந்த சனிக்கிழமை ஆளுநரைச் சந்தித்து தெரிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து சட்டசபையைக் கலைக்கும் உத்தரவை ஜனாதிபதி வெளியிட்டார்.

## கோண்டாவில்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

டைந்தனர்.

பஞ்சாட்சரம் சற்பத்திரன் [வயது 30], அவரது பிள்ளைகளான நிரோஜன் [வயது 5], நிலுஜன் [வயது 3], நிவேதிகா [வயது 2] ஆகியோரே பூசகர் குடும்பத்தில் உயிரிழந்தவர்கள் ஆவர்.

வீதியில் சென்ற 4 பேரும் குண்டு வீச்சில் அடையாளம் தெரியாதவாறு சிதைந்து உயிரிழந்தனர். அவர்களில் கோண்டாவிலைச் சேர்ந்த தர்மலிங்கம் [வயது 70] என்பவரும் ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்த மற்றவர்களின் பெயர், விவரங்கள் தெரிய வரவில்லை.

பொன்னம்பலம் பவளம்மா [வயது 38] வலது கால் துண்டிக்கப்பட்டு படுகாயமுற்றார். அவரது மகன் பொ. குகதாசன் [வயது 15] மற்றும் இராசா புஷ்பநாதன் [வயது 47] ஆகியோரும் காயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ப. நோ. கூ. சங்க கிளைக் கட்டடமும் முற்றாகச் சேதமடைந்தது. பேக்கரி ஒன்றும் சேதமானது.

அரசடிப் பிள்ளையார் கோவில் மடம், கோபுரம், தேர்முட்டி ஆகியனவும் சேதமடைந்தன.

இதைவிட வைரவர் ஆலயம், உப-தபாற் கந்தோர், சனசமூக நிலையம் முதலியனவும் சேதமாகின.

காலை 7-30 மணியளவில் நடந்த குண்டு வீச்சில் 3 வீடுகள் சேதமுற்றன. வேறு இழப்புகள் ஏற்படவில்லை.

[ஒ-69-90-15-143-154]

## வேலணை ...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்து கொண்டிருந்த கணேசு அப்புத்துரை [வயது 28] கை முறிந்து படுகாயமடைந்தார். அருகில் இருந்த சைக்கிள் கடையின் உரிமையாளர் எஸ். விக்னேஸ்வரனின் [44 வயது] செவிப்பறைகள் பாதிக்கப்பட்டதால் அவர் கேட்கும் சக்தியை இழந்தார்.

மற்றைய குண்டு சந்தியில் இருந்த அரிசி ஆலைக்குப் பக்கத்தில் விழுந்ததால் அரிசி ஆலையும் அருகில் இருந்த சில வீடுகளும் சேதமுற்றன.

சாட்டி பள்ளிவாசலுக்கு அண்மையில் விழுந்த குண்டினால் ஒரு வீடு சேதமடைந்தது.

பள்ளிவாசல் கடல் பகுதியில் விழுந்த மற்றும் ஒரு குண்டு வெடிக்காத நிலையில் காணப்பட்டது.

[உ-167-125-15]

## அரியாலைக்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

உயிரிழந்த தம்பதிகளின் மற்றொரு மகளான — கணவனை இழந்த ஜெயராணி தங்கராசா [33 வயது] படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ளார். மற்றும் குமரேசு மகேஸ்வரி [55 வயது] அரியாலை, ராஜ கருணா [19 வயது] பாஷையூர் ஆகியோரும் காயமடைந்தனர்.

இப்பகுதியில் 3 வீடுகள் சேதமாகின. கால் நடைகளும் செத்து மடிந்தன. பயன்தரு மரங்கள் பல நாசமாகின.

[ஒ-51-15-3-143]

## பேகம் ஸியா பதவியேற்பு

டாக்கா, மார்ச் 5

பங்களாதேஷின் புதிய பிரதமராக தேசியக் கட்சித் தலைவி பேகம் காலிதாஸியா இன்று செவ்வாக்கிழமை பதவி ஏற்க இருக்கிறார். அவரது புதிய அமைச்சரவையும் இன்று பதவி ஏற்கும் என்று அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சன் கொலையுடன் புலிகளுக்குத் தொடர்பில்லை

## லண்டனில் கிட்டு கூறியதாக தகவல்

லண்டன், மார்ச் 5

ஸ்ரீலங்கா பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் கொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை.

விடுதலை புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் [கிட்டு] இவ்வாறு கூறியதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகள் தலைமைப்பீடம் தமக்கு அனுப்பிய ஒரு செய்தியில் விடுதலைப் புலிகள் இக் கொலையை செய்யவில்லை என்றும் —

ஆயினும் இலங்கையின் இனவாத ஒடுக்கு முறையின் சின்னமாக விளங்கிய ரஞ்சன் விஜேரத்னா, ஆயிரம் ஆயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் கொலை செய்யப்பட காரணமாயிருந்தவர் என்றும்—

அவருடைய மறைவு தமிழ் மக்களுக்கு ஒரு தற்காலிக நிம்மதியை கொடுத்திருப்பதாக விடுதலைப் புலிகள் நம்புவதாகவும் திரு. கிட்டு மேலும் கூறியதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

[உ-5]

# திருமலையில் கடந்த வாரம் 13 பேர் சுட்டுக் கொலை

கொழும்பு, மார்ச் 5

திருகோணமலை மாவட்டத்தில் குண்டுக் காயங்களுடன் சிங்களவர்களின் சடலங்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகக் கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் மொத்தம் 13 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 9 பேர் பொதுமக்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

[அ-எ]

# மரண அறிவித்தல்கள்

## கமலநாதன் ஹேமலதன்

ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவிலடியைச் சேர்ந்த கமலநாதன் - சிவாஜினி தம்பதிகளின் புத்திரன் செல்வன் ஹேமலதன் [குமரன் பாலர் பாடசாலை] காலமானார். இவர் சிந்துஜா [உடுவில் மகளிர் கல்லூரி], ஜெசிந்தன் [பாலசுப்பிரமணிய வித்தியாசாலை] ஆகியோரின் சகோதரர் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 6-3-1991 புதன் கிழமை காலை 9-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் ஆனைக்கோட்டை கரையன்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

மூத்தவிநாயகர் கோவிலடி,
ஆனைக்கோட்டை.

கு. ஸ்ரீகாந்தா
[16046]

திருமதி

## செல்லப்பா நாகரத்தினம்

கோயில் குடியிருப்பு சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி செ. நாகரத்தினம் அவர்கள் காலமாகிவிட்டார்கள். அன்னார் ஓய்வுபெற்ற கலால் இலாகா உத்தியோகத்தர் திரு. செல்லப்பா அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ஜெயசோதி, திருமதி ஜெயசந்திரா, செல்வி ஜெயமணி, திரு. கதிர்காமநாதன் [கனடா], திரு. மகேந்திரன், திருமதி ஜெயரஞ்சினி [லண்டன்], திரு. ராம்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. பாலகிருஷ்ணன் [ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி], திரு. நடராசா [பிரான்ஸ்], திருமதி பத்மாவதி [யாழ். பல்கலைக்கழகம்], திரு. சி. ரதி [லண்டன்] ஆகியோரின் அருமை மாமியாரும், சஞ்ஜீவன், சங்கீதா, ஜனனி, ருஷான் [லண்டன்] ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 5 - 3 - 91 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணியளவில் கோயில் குடியிருப்பு 'ஜெயவாசா' இல்லத்தில் நடைபெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

செ. மகேந்திரன், (பபா)

சாவகச்சேரி. [16041]

## சின்னத்துரை தர்மலிங்கம்

பிரபல வர்த்தகர் சின்னத்துரை தர்மலிங்கம் அகால மரணமானார்.

இவர் அருந்தவமணியின் அன்புக் கணவரும் சிறிகாந்தன்[ஆசிரியர், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்]. சித்திர்லா[ஆசிரியை, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்], செல்வராணி[ஜெர்மனி], இன்பநேசன்[ஆசிரியர்] ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று 10.00 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் மயானத்தில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

குமரகோட்டம்,
கோண்டாவில் கிழக்கு.

சிறிகாந்தன் [மகன்]
[15691]

இப்பத்திரிகை உதயன் நியூ பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05-03-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அருள் - 89 தாக்குதல்

நேற்று முன்தினம் இரவு 9. 30 மணியளவில் வீமன்காமம் பகுதியில் முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் அருள் — 89 தாக்குதல் நடத்தினர்.

ஆனையிறவு இராணுவ முகாம் மீதும் சனியன்று காலையில் அருள் — 89 தாக்குதல் நடத்தப்பட்டது.

இரு தாக்குதல்களிலும் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை. [உ]

## இடி தாக்கி தாய்,மகன் பலி

யாழ்ப்பாணம், மார்ச்5

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் உள்ள வேணாவில் என்ற இடத்தில் அண்மையில் இடிமின்னல் தாக்கி இருவர் உயிரிழந்தனர். சம்பவத்தில் எட்டுப்பேர் மயக்கமடைந்தனர்.

அடைக்கலம் என்ற பெண்மணியும் அவரது மகனான ராஜன் என்பவரும் இடிமின்னல் தாக்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ரெலோவினர் மூவர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

கடந்த சனியன்று இரவு 7.45 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் செட்டிபாளையத்தில் உள்ள படையினரின் முகாமிலிருந்து வெளியே வந்த மூன்று ரெலோவினர் விடுதலைப் புலிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமாகினர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலை தெரிவித்தன. [உ]

## சதாமின் மகன் கொலை?

தெஹ்ரான், மார்ச் 5

ஈராக்கில் தற்போது இடம்பெற்று வரும் உள்நாட்டுக் கலவரங்களில் ஜனாதிபதி சதாம் ஹுசேனின் புதல்வரான உதேய் கொல்லப்பட்டார் என்று ஈரானுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. [அ-எ]

## புதிய முகாம்

யாழ்ப்பாணம் மார்ச் 5

மட்டக்களப்பு மாவட்டம் பெரியபோரதிவில் மரத்தடிச் சந்தியில் கடந்த சனியன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினர் புதிய முகாம் ஒன்றை அமைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## ஹாஸினா ராஜினாமா

டாக்கா, மார்ச் 5

பங்களாதேஷ் அவாமி லீப் கட்சியின் தலைமைக் பதவியை ஷேக் ஹாஸினா ராஜினாமாச் செய்து விட்டார். இவர் பங்களாதேஷின் தேச பிதா முஜிபுர் ரஹ்மானின் மகனாவார்.

கடந்த புதன்கிழமை நடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் இவரது அவாமி லீக் கட்சி 85 தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற்றதனால் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது போயிற்று என்பது தெரிந்ததே.

## ஈராக்குக்கு மருந்து

ஈராக்குக்கு அத்தியாவசியப் பொருள்களான குழந்தைகளின் பால் உணவு, மருந்து வகைகளை உடனடியாக அனுப்பும்படி 'ஐ- நா. பாதுகாப்புச் சபை நேற்று உத்தரவிட்டது

ஈராக் மீதான பொருளாதாரத் தடை தொடர்ந்து அமுலில் இருந்துவரும் அதே நேரத்தில் இந்த மனிதாபிமான நடவடிக்கையை ஐ.நா. எடுத்துள்ளது. [அ-எ]

# ஊர்காவற்றுறை ராணுவம் கடும் ஷெல் தாக்குதல்

புளியங்கூடல், மார்ச் 5

ஊர்காவற்றுறை முகாம் இராணுவத்தினர் நேற்றுக் காலை குடியிருப்பு பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக கடும் ஷெல் வீச்சுக்களை நடத்தினர்.

கரம்பன், செருக்கன் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. ஹெலி ஒன்றும் தாக்குதலை நடத்தியது.

ஊர்காவற்றுறை முகாம் பகுதியில் அடுத்தடுத்து வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

இதேவேளை நேற்று முன்தினம் இரவும் தம்பாட்டிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் இப்பகுதியில் இரண்டு வீடுகள் சேதமடைந்தன. கால்நடைகளும் இறந்தன.

[ஒ-125-167-15]

# சதாம் ஆட்சி கவிழ்ந்தது?

லண்டன், மார்ச் 5

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான பஸ்ரா மற்றும் சில நகரங்களில் ஜனாதிபதி சதாம் ஹுசேனின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு விட்டதாக ஈரான் தலைநகரில் இருந்து இயங்கும் இஸ்லாமியப் புரட்சி சபை நேற்று அறிவித்தது.

இந்த அறிவிப்பு குறித்து பக்தாத் வானொலி கருத்து எதனையும் வெளியிடவில்லை.

பஸ்ரா நகரின் மேயர், பொலீஸ் அதிபர் ஆகியோர் கொல்லப்பட்டனர் என்றும் செய்திகள் தெரிவித்தன! பஸ்ரா ஆளுநரும் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டதாக பிந்திய செய்தி ஒன்று தெரிவித்தது.

பஸ்ராவில் பல குண்டு வெடிப்புச் சம்பவங்களும் இடம்பெற்றன என்றும் பி. பி. சி. வானொலி அறிவித்தது. [அ-எ]

[மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்]

# சுன்னாகத்தில் கடைகளை இன்று மூடுமாறு கோரிக்கை

சுன்னாகத்தில் நேற்று இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் மரணமான கடை உரிமையாளர், பொதுமக்கள் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இன்று செவ்வாய்க்கிழமை சகல வர்த்தக நிலையங்களையும் மூடுமாறு சுன்னாகம் வர்த்தகர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஒரு நாள் பூரண கடை அடைப்பு செய்வதுடன் கடைகளில் கறுப்புக் கொடிகளை பறக்க விடுமாறும் சங்கம் கேட்டுள்ளது. [ஒ-90]

# யாழ். வந்த பொருள்கள் பூநகரிப் பகுதியில் தேக்கம்

குருநகர், மார்ச் 5

பூநகரி - வில்லடியிலிருந்து சங்குப்பிட்டி ஆலடி வரையில் நூற்று இருபத்தைந்து லொறிகள் பொருள்களுடன் காத்து நிற்கின்றன.

பத்துக்கும் மேற்பட்ட லொறிகள் தேங்காய் நிரம்பியுள்ளன. மற்றைய லொறிகளில் அத்தியாவசியப் பொருள்கள் உள்ளன.

இந்தப் பொருள்கள் அனைத்தும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் விலைகளில் வீழ்ச்சி ஏற்படும் என மேலும் நம்பப்படுகிறது.

[ஒ-51]

## விமான விபத்தில் 25 பேர் பலி

அமெரிக்கா, கொலராடோ என்னுமிடத்தில் போயிங் விமானம் ஒன்று தரையிறங்கும்போது மோதி நொருங்கியதில் அதில் இருந்த 20 பயணிகளும், 5 விமானச் சிப்பந்திகளும் மரணமானார்கள்.

## குடாநாட்டில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

களில் பலியான அனேகரின் உடல்கள் சிதறிச் சின்னாபின்னமாகின. இன்னும் சில உடல்கள் அவயவங்கள் துண்டிக்கப்பட்ட நிலையிலும், முண்டங்களாகவும் காணப்பட்டன.

காயமடைந்தவர்களிலும் அனேகர் தமது அவயவங்களை இழந்தனர். பலர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். [ஒ]

## இளைஞர் பற்றி தகவல் இல்லை

கோண்டாவிலில் அரசடிப் பிள்ளையார் கோயிலில் நேற்று இடம்பெற்ற குண்டு வீச்சுச் சம்பவத்தின்போது அப்பகுதியில் வேலை செய்து கொண்டிருந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் குறித்து நேற்று இரவு வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

தொலைத் தொடர்பு திணைக்களத்தில் ''லைன்ஸ்மன்'' ஆகக் கடமையாற்றும் முத்துச்சாமி மகேஸ்வரன் [வயது 37 — நீர்வேலி] என்பவர் பற்றியே தகவல்கள் கிடைக்கவில்லை.

இப்பகுதியில் குண்டு வீச்சால் உயிரிழந்த மூவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட முடியாத நிலையில் சிதைவடைந்திருந்தன என்பது தெரிந்ததே. [உ-5]

## 4 பெண்களும்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தளையசிங்கம் உஷாராணி [22 வயது], கிருபாமூர்த்தி கமலாதேவி [40 வயது] ஆகிய ஐவரும் உயிரிழந்தனர்.

பூபாலசிங்கம் சிங்கக்குட்டி [28 வயது] ஒரு கையை இழந்துவிட்டார். பா. செல்வச்சந்திரன் [24 வயது], எஸ். சிதாங்கனி [50 வயது], எஸ். தேவமணி [35 வயது], அப்புசாமி தவமணி [28 வயது] ஆகியோர் காயமடைந்தனர். இவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## வல்லை. .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சென்று கொண்டிருந்த த. சிவப்பிரகாசம் [53 வயது] காயமடைந்து மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இக்குண்டுவீச்சினால் கோவிலடியில் பிரதான வீதியில் பெரும் குழி ஏற்பட்டுள்ளது. [உ-11-118]

குண்டு வீச்சு இடம்பெற்ற இடத்துக்கு சமீபமாக— பாடசாலையில் கல்வி பயின்று கொண்டிருந்த மாணவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பிக் கொண்டனர்.

இப்பகுதியில் மற்றும் சில வீடுகளும் சேதமடைந்தன. [ஒ-118-15-3]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org